மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆராய்ச்சி முடிந்ததற்குப் பின்னால் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : இந்தக் கரடிக் கூட்டத்திற்கு மத்தியில் தைரியமாகச் செல்லத் துணிந்தவர்கள் மத்திய அரசாங்கமா அல்லது மாநில அரசாங்கமா? அந்த மொலிப்டினம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கரடிக் கூட்டம் என்பது ஊர் பெயர். அங்கு கரடி கிடையாது. மொலிப்டினத்தைக்கொண்டு Molybdenum steel is widely used in air crafts, automobiles, shafts, high speed vehicles, pumps, gears, guns, armour plates, etc., ஆகியவற்றையெல்லாம் உற்பத்தி செய்யலாம் என்று ஆராயப்பட்டிருக்கிறது.

Tamil Nadu Cements, Alangulam

* 620 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of persons working in the Packing Department in Tamil Nadu Cements, Alangulam; and

(*b*) whether they are working under the Department or under Contractors?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சிமெண்ட் மூட்டைக் கட்டும் வேலை, தொழிற்சாலையைச் சேர்ந்த 58 தொழிலாளர்களால் செய்யப்படுகிறது. சிமெண்ட் மூட்டைகளை வாகனங்களில் ஏற்றுதலும், கோணிப்பைகளில் முத்திரையைப் பொறித்தலும் 20 ஆட்கள்மூலம் ஒபந்தக்காரரால் செய்யப்படுகின்றன.

திரு. க. சுப்பு : ஒப்பந்தக்காரர்களின்கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு வேலை இருப்பது, இல்லாமல் விடப்படுவது என்ற நிலைமையில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஒப்பந்தம் முறையை ரத்து செய்து அவர்களையும் துறையின் ஊழியர்களாகப் போட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இப்படி யோசனை இல்லை. இதிலே இரண்டு பகுதியாக வேலை செய்யப்படுகிறது. முதல் பகுதி தொழிற்சாலை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள். கடைசியில் லோட் செய்யும்போது தனியாக ஒப்பந்தக்காரரை வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பின்னர் பரிசீலனை செய்யப்பட்டு முடியுமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும்.

1973 ஏப்ரல் 3]

திரு. ஜே. ஜேம்ஸ்: காண்டிராக்ட் சிஸ்டத்தைக் கூடிய வரையில் அகற்ற வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும்போது அரசாங்க சிமெண்ட் ஆலையில் காண்டிராக்ட் முறையை வைத்துக்கொண்டிருப்பது சரியா? அதை அகற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழிற்சாலையில் மூட்டையை வெளியே கொண்டு போகும்போது யார் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான் இந்த மூட்டையை லோட் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு சுப்பு அவர்கள் கேட்டுக்கொண்டபடி இதைப் பற்றிப் புனர் பரிசீலனைசெய்து நாமே செய்யலாமா என்று பார்க்க வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தொழிற்சாலைகளில் லோடிங், அன்-லோடிங் உட்பட தொழிற்சாலைத் தொழிலாளர்கள்தான் செய்கிறார்கள். காண்டிராக்ட் லேபர் அபாலிஷன் ஆக்ட் வந்தபிறகும் அரசாங்கத் தொழிற்சாலையில் காண்ட்ராக்ட் முறை இருப்பது சரியல்ல என்ற காரணத்தால் காண்ட்ராக்ட் தொழிலாளர்களை ஆலைத் தொழிலாளர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிக் காண்ட்ராக்ட் முழுவதையும் விட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அதைப்பற்றிச் சட்டப் பிரச்சினை எதுவும் எழவில்லை.

Purchase of Implements by Mineral Development Project

* 621 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Mineral Development Project have purchased a number of diamond drill bits and reaming shells during the calendar year 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தமிழ்நாட்டுக் கனிவளர்ச்சிக் கழகம் வைர வியாபார வளர்ச்சி அபிவிருத்திக்காக எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மினரல் ப்ராஜக்ட்ஸ் சம்பந்தப்பட்டது. வியாபாரம் சம்பந்தப்பட்டது அல்ல.

திரு. என். டென்னிஸ்: தமிழக கனி வளர்ச்சிக் கழகம் வைர அபிவிருத்தி சம்பந்தமாக எக்ஸ்ப்ளோரேஷன் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?